[1986 மே 3

திரு. க. நரசிம்மபல்லவன் : பேரவைத் தலைவர் அவர்களே, தொழில் துறையில் பின்தங்கிய பகுதியாக எந்தக் கொள்கைத் திட்டத்தின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படுகிறது என்பதை அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : பேரவைத் தலைவர் அவர்களே, ஏ, பி, சி என்ற மூன்று பிரிவுகளாக மத்திய அரசு பின்தங்கிய பகுதிகளை அறிவிப்பதில் கவனம் செலுத்துகிறது, அனுமதி அளிக்கிறது. அந்த வகையில் தென்காசியை 'பி' பிரிவின் கீழ் கொண்டு வருவதற்கு ஏற்பாடு செய்திருக்கிறோம். 'பி' என்று சொன்னால் 15 சதவிகிதம் வரை சலுகை கிடைக்கும். 15 இலட்சத்திற்கு மேற்படாது உதவிகள் கிடைக்கும்.

தஞ்சை மருத்துவக் கல்லூரி முதல்வர்.

615—(*வினா எண் 1847) **திரு. துரை கிருஷ்ணமூர்த்தி :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இந்திய மருத்துவ மன்றம் வகுத்துள்ள விதிமுறைகளின்படி, மருத்துவக் கல்லூரி முதல்வர் பதவிக்கு குறைந்தது 10 ஆண்டுகளாவது ஆசிரியர்களாக (மருத்துவம் கற்பிக்கும்) பணி அனுபவம் பெற்றிருக்கவேண்டும் என்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், தஞ்சை மருத்துவக் கல்லூரி முதல்வர் இந்தத் தகுதியைப் பெற்றுள்ளாரா ?

(இ) இல்லையெனில், இது குறித்து அரசு எடுக்கக் கருதியுள்ள நடவடிக்கை யாது ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) ஆம்.

(ஆ) மற்றும் (இ) : இத்தகுதி பெறாதிருந்த முன்னாள் ரை மாற்றிவிட்டு இத்தகுதி பெற்றுள்ள ஒருவரை அக் கல்லூரி ரைாக நியமிக்கபட்டுள்ளது.